மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இது பற்றி எப்படி முடிவு எடுக்க வேண்டும் என்பதைப்பற்றி இங்கே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் அளித்த அபிப்பிராயத்தை இந்த அரசு பெற்று அந்த முடிவின் படி நடவடிக்கை எடுத்து வருகின்றது. மைசூரில் அணையைக் கட்டுகின்றார்கள் என்றால், அப்போது அதை ஒத்துக்கொண்டிருக்கின்றோம். அணையைக் கட்டினாலும், நமக்குக் கிடைத்து வருகின்ற தண்ணீர் குறைந்து விடக்கூடாது என்பதுதான் நம் வாதம். அதைத்தான் வலியுறுத்திக்கொண்டு வருகின்றோம். தாமதம் ஏற்பட்டால், மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களை இந்த அரசு அழைத்து அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பெற்று ஏற்ற நடவடிக்கை எடுக்கும் என்று உறுதி கூறுகின்றேன்.

Election of the Directors of the Ramanathapuram District Co-operative Central Bank.

* 262 Q.—THRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Government are aware of the fact that the Presidents of the Co-operative Societies, whose loan instalments were outstanding for more than three months, have been elected as Directors of the Ramanathapuram District Co-operative Central Bank in the election held on 20th May 1971 and that the election officers have permitted the Presidents of those societies to vote at these elections; and

(b) if so, the action taken thereon by the Government?

இராமநாதபுரம் ஜில்லா கூட்டுறவு மத்திய பாங்கின் டைரக்டர்கள் தேர்தல்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் ஜில்லா கூட்டுறவு மத்திய பாங்கின் நிர்வாக சபைக்கு 20—5—1971-ல் நடைபெற்ற டைரக்டர்கள் தேர்தலில், 3 மாதங்களுக்கு மேல் பாங்க் கடன் தவணை கடந்த சங்கங்களின் தலைவர்கள், டைரக்டர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதையும், அத் தேர்தலில் அந்தச் சங்கங்களின் தலைவர்கள் வாக்களிக்க தேர்தல் அதிகாரிகள் அனுமதித்திருக்கிறார்கள் என்பதையும் அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

1972 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டம் மத்திய வங்கியின் நிர்வாகக் குழுவிற்கு 20—5—1971 அன்று நடந்த தேர்தலை எதிர்த்து தேர்தல் வழக்கு எதுவும் 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 73-ம் பிரிவின் கீழ் அதிகாரமுடைய நீதிமன்றத்தின் முன்பாக தாக்கல் செய்யப் படவில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, வழக்கு தாக்கல் செய்யப் பட்டதைப்பற்றி நான் கேட்கவில்லை. கூட்டுறவுச் சட்டத்தின்படி தவணை கடந்த சங்கங்களின் மெம்பர்கள் வாக்களிக்கக் கூடாது என்று இருக்கிறது. டைரக்டர்களாக வரக்கூடியவர்கள் தவணை கடந்த சங்கங்களின் மெம்பர்களாக இருக்கக்கூடாது என்று இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்டவர்கள், கூட்டுறவு டிஸ்ட்ரிக்ட் டெபுடி ரிஜிஸ்டிரார் தலைமையில் தேர்தல் நடந்து, டைரக்டர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களே, இதற்கு காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தேர்தல் ஒழுங்காகவே நடைபெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருப்பது போல் நடைபெற்றிருந்தால், 73-வது செக்ஷன் படி தேர்தல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தவணை கடந்த சங்கங்களின் மெம்பர்கள் வாக்கு அளிக்கலாமா என்பது தான் என் கேள்வி.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தவணை கடந்த சங்கங்களின் மெம்பர்கள் வாக்களிக்க முடியாது. இந்தத் தேர்தலில் அப்படி யாரும் நிற்கவில்லை. அப்படி வாக்களித்திருந்தால், 73-வது செக்ஷன் படி வழக்கு தாக்கல் செய்திருப்பார்கள்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : வழக்கு தொடரப்படாத காரணத்தால் அது நியாயமாகி விடாது. இந்தத் தவறு எப்படி நடந்தது என்று அறிய விரும்புகிறேன்.

MR. CHAIRMAN : The hon. Member is repeating the same question.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பல முறை சொல்லியாகி விட்டது மிகவும் ஒழுங்காகவும், நேர்மையாகவும், நியாயமாகவும் யார் யார் வாக்களிக்க வேண்டுமோ அவர்கள் வாக்களித்து நல்ல முறையில் தேர்தல் நடைபெற்றிருக்கிறது.